# திருக்குறளில் மருத்துவ குணமும் வள்ளுவனுக்குப் பிடித்த மலரும்

**முனைவர் ப.தினகரன்**
**தமிழ்த்துறைத்தலைவர், கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
**ஈரோடு - 638 107.**

55

**ஆய்வு நோக்கம்** :

உலகப் பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறளில் வள்ளுவர் அறம்,பொருள்,இன்பம் என்னும் முப்பிரிவுகளில் இயற்கையைப் புதிய நோக்கில் காண்கிறார் என்பதைச் சுட்டிச் சொல்வது ஆய்வின் நோக்கமாகும் .

**ஆய்வுச் சுருக்கம்** :

திருக்குறளில் மருத்துவ குணமும் வள்ளுவனுக்குப் பிடித்த மலரும் எனும் தலைப்பில் எண்ணம் என்னும் மருந்து, ஆசை என்னும் மருந்து, இன்ப துன்பங்களில் மலர்களின் பங்கு, அனிச்சமலரின் சிறப்பு குறித்தும் இயற்கையைப் பழமையோடு புதிய நோக்கில் காட்டப்பட்டுள்ளது ஆய்வுச் சுருக்கமாகும்.

**முன்னுரை**

வள்ளுவன் ஒரு பன்முக அறிஞன். அவர் தொட்டுக் காட்டி விளக்கம் தராத துறை இல்லை. அவருடைய கருத்துகள் இன்றளவும் ஒப்புக் கொள்ளப்பட்டு இருக்கின்றன. கீழ் நாட்டு அறிஞர் மட்டுமின்றி, போப்,எல்லிஸ், பெஸ்கி போன்ற மேலைநாட்டு அறிஞர்களும், அவர் சொன்ன கருத்துகளைப் பொன்னே போல் போற்றி, தம் முடிமேல் ஏந்திக் கொண்டுள்ளனர். இப்படிப்பட்ட சிறப்பு அவரால், தமிழ்மொழிக்கும் இனத்திற்கும் கிட்டியது. எனவேதான், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்பது பாரதியார் நெஞ்சாரப்போற்றினார்.

திருக்குறள் பண்புடையாளர் தொடர்பு போல் பயில்தொறும் பயன் தருகிறது . ஒருவரே அதை இளமையில் படிக்கும் போது அவருடைய மனநிலைக்கு ஏற்ற பொருள் தெரிகிறது. அதுவே பட்டறிவு மிக்க நிலையில் பயிலும்போது விரிந்த பொருளை வழங்கியது. தனித்து கற்கும்போதும் ஒப்பிட்டு ஆராயும் போதும் கொள்வோரின் அறிவு நிலைக்கு ஏற்ப அது பொருள் தெரிகிறது. இது அதனுடைய மற்றொரு சிறப்பு.

**எண்ணம் என்னும் மருந்து**

பிறர் நமக்கு கேடு செய்யும் போதும் துன்பம் தரும் போதும் நம் மீது பழி சுமத்தும் போதும் நம்மைப் பற்றி அவதூறு பரப்பும் போதும் நமது தன்மானத்தைப்பாதிக்கும் விதத்தில் பேசும் போதும் செயல்படும் போதும் நமக்கு அவர் மீது பகை உணர்ச்சியும் நாம் அவரைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணமும் ஏற்படுகிறது.

பிறர் நம் நெஞ்சில் ஏற்படுத்திய காயங்களையும் பிறர் செய்த தீங்கையும் எண்ணிக்கொண்டு அவருக்கு எதிராக மனதை கல்லாக்கிக் கொள்ளும் போதெல்லாம் அவரது அன்பை இழக்கிறோம் .தொடர்பை இழந்து துன்புறுகிறோம். மனதில் துன்பமும் குழப்பம் ஏற்படுகிறது. இந்த துன்பத்திற்கு மருந்தே திருக்குறள் என்னும் மருத்துவமே

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணி மூன்று " (1)

வகுத்த வாதப் பகுதி, பித்த பகுதி, ஐப் பகுதி என்னும் பகுதிப் பாகுபாடுகளை உடையது. உணவு ,சுவை , அளவு என்னும் பொருந்துதல் வேண்டும். உடலுக்கு இயல்பாகிய நோய் மூவகைத் என்பதுவும் அவற்றுள் துன்பம் செய்தது காரணம் இருவகைத்து என்பதுவும் கூறப்படுகிறது.

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு" (2)

கைப்பு, புளிப்பு ,தித்திப்பு, காழ்ப்பு, உவர்ப்பு,துவர்ப்பு என்று சொன்ன அறுவகை சுவையும் இப்படி மாறுபட வகுத்து உண்ணாது ஒரு படியே இன்னும் சில சுவை உண்டியை ஒழித்து, மருந்துநூல் கூறியவாறு, உண்ணப் பெற்றால் ஓர் இடையூறும் இல்லை மக்கட்கு ஆகும்.

**ஆசை என்னும் மருந்து**

மனத்தைப்பிசைந்து கனியாக்கிப் பிறரை மன்னிக்கும் போதெல்லாம் அவரது அன்பைப் பெற்று மகிழ்கிறோம் . அதிகரித்த நட்பையும் தோழமையையும் பெற்று இன்பம் எய்துகிறோம் . அமைதியும் நிம்மதியும் நிறைந்த மனத்தைப் பெற்று இன்பம் அடைகிறோம் .மற்றவர்களது நன்மதிப்பைப்பெறுகிறோம். ஆசை அடங்கிய செருக்கை வென்ற இன்பத்தை எய்துகிறோம்.

**மன்னிப்பு என்னும் மருந்து**

தவறிழைத்தவனை அவன் செய்த தவறுக்காக வெறுக்கும் போதும் குற்றம்சாட்டும் போதும் குறிப்பிட்ட ரகத்தைச்சார்ந்தவர் என்று கூறும் போதும் அவரது நடவடிக்கையையும் அவரையும் ஒன்றாக்கிக் குழப்பும் போதும் நாம் பிழை செய்கிறோம். நமக்குத்துன்பம் தந்தவர்களையும் நமக்கு இன்னா செய்தவர்களையும் நாம் மன்னித்து விடவேண்டும். நம்மில் பலர் பகைவர்களை மன்னித்து விடுகிறார்கள் . ஆனால் பகைமை ஏற்படக்காரணமான நிகழ்ச்சியையோ பகைவரையோ மறப்பதில்லை .பகைமை உணர்ச்சி மறைவதில்லை.

நாம் கோபப்படும் போதும் பதட்ட ப்படும்போதும் பழிவாங்கும் உணர்ச்சி மேலிட்ட நிலையிலும் பயப்படும் போதும் பகைமை உணர்ச்சி மேலிட்ட போதும் உடலில் பல சுரப்பிகள் நமது உடலுக்குத் தீங்கு தரக்கூடியவற்றைச் சுரக்கின்றன என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். மேற்கண்ட மனநிலையில் உணவு உண்ணும் போதும் அந்த உணவு சரிவரச் செரிப்பதில்லை .அதனால் மேலும் உடல் நலம் கெடுகிறது .எனவே நமக்குப் பிறர் செய்த தீங்கை மறக்காமல் வெறும் ஒப்புக்காக மன்னிப்பது உடல் நலனை மேம்படுத்தாது. துன்புறுத்திய பகைவரையும் மறந்து பகைமை ஏற்படக் காரணமான துன்பம் தந்த நிகழ்ச்சியையும் நடந்த சுவடு தெரியாமல் மறந்தால்தான் மனம் அமைதியடையும் . மன்னிப்பு முழுமையானதாகவும் உண்மையானதாகவும் இருக்கும்போது மறந்து விடுவது என்பது நெஞ்சில் ஏற்பட்ட காயங்களில் இருந்து வழியும் சிலை அகற்றி குணப்படுத்தி புண்ணை ஆற்ற வல்லது நான் மன்னிப்புக்காக இப்போது முன்பு ஏதும் இருந்ததில்லை என்று உணர்ச்சி பூர்வமாக ஒப்புக் கொள்ளும் போதுதான் உண்மை மன்னிப்பு பரிணமிக்கிறது .முதலில் நாம் அடுத்தவரை வெறுக்கவோ தூற்றவோ கூடாது.

**இன்ப துன்பங்களில் மலர்களின் பங்கு**

நம்முடைய முன்னோர்கள் இயற்கையோடு கலந்த வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் .இந்நாள்போல் செயற்கை அந்நாளில் அவர்கள் மனதை ஆட்கொள்ளவில்லை. அதிலும் தமிழ்ப் பெரும் புலவர்களோ இயற்கையின் ஒவ்வொரு அமைப்பிலும், அசைவிலும் ,அழகையும் ,இனிமையும் கண்டு மகிழ்ந்தார்கள் . அவர்கள் தம் மகிழ்ச்சியைப் பெற பிறரும் பெறவேண்டும். என்று நினைத்துத்தம் பாடல்களில் இயற்கைக் கூறுகளை ஊவமைகளாக அமைத்துள்ளார்கள். மலர் காண கண்ணுக்கு இன்பம் தரும் ,அதிலிருந்து எழும் ,மனம் முகர முகர இன்ப மயக்கத்தை விளைவிக்கும். அதன் மென்மை தொடத் தொடச்சுகம் தரும். அதன் தேன் உண்ண உண்ண இனிமை பயக்கும். அதனில் மொய்க்கும் தும்பியின்பண்ணிசையை நாளெல்லாம் கேட்கலாம். இவ்வாறு ஐம்புலன்களுக்கும் ஒருசேர இன்பம் தருதல் காரணமாக மலரை நடுநாயகமாக வைத்து தமிழறிஞர்களின் கற்பனைகள் பல திசைகளிலும் விரிந்து மலர்ந்து தமிழ் மணம் வீசின மக்களின் விருப்பங்கள் மலரோடு கலந்தன .அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு பெற்றன.

**அனிச்ச மலர்**

வள்ளுவர் பழமைப்பொருளில் புதியகண்ணோட்டம் செலுத்துபவர் .அதனால் மற்றவர்களின் கண்ணில் படாத அனிச்சமலர் அவர் கண்களுக்கு மட்டுமே தெரிகிறது . மன்பதை வாழ் மக்களின் துயரங்களை கண்டு பொறுக்காத அவருடைய உள்ளம் அனிச்சமலர் விரும்புகிறது.

வள்ளுவருக்கு முன் புலவர்கள் மலரைப் பாடி இருப்பினும் ஏனோ அனிச்சத்தை மட்டும் மிகுதியாகப் பாடமறந்து விட்டனர். மென்மைத் தன்மை உடைய அனிச்சமலர்வள்ளுவர் காலத்திற்கு பிறகு மறைந்து இருக்கலாமோ என்ற எண்ணத்திற்கும் இடம் தருகிறது அம்மலர் உண்மையில் அறிந்திருந்தாலும் கூட வள்ளுவரின் கைவண்ணம் பட்டதால் இறவா நிலையை அடைந்து விட்டது அந்த மலரின் அழகு நிறம் தன்மை முதலிய பண்புகள் அவரால் குறிக்கப்படவில்லை மென்மைத்தன்மை மட்டுமே கற்பனை நயம் பட கூறப்படுகிறது அனிச்ச மலரை மிகுதியாக கையாண்ட புலவர் வள்ளுவர் ஒருவரே பூவின் மென்மை அவரது நெஞ்சை கவர்ந்தவை அதற்கு காரணமாகும் அனிச்ச மலரின் உண்மைத்தன்மை விருந்தினருக்கும் தலைவிக்கும் அமைக்கப்படுகிறது விருந்தினர் அனிச்சம் போல் மென்மைத் தன்மை உடையவர் அதேபோல் குறைந்து எளிதில் வாடும் தன்மை உடையவர் அனிச்சமலர் நோக்கும்போது குறைந்து விடும் ஆனால் விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கும்போது குறைந்துவிடும் என்று மிக மென்மையான அனிச்சமலர் மென்மையான இதயம் கொண்டவராக விருந்தினரை காட்டுகிறார் வள்ளுவர்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து".(3)

இன்று மென்மைத் தன்மை வாய்ந்த விருந்தினரை எவ்வாறு ஓம்ப வேண்டும் என்று நயம்படக்காட்டுகிறார். விருந்தோம்பலில் அமையும் பாடலில் மட்டும்தான் அனிச்சமலர் புழையை சார்ந்ததாக அமைகிறது மற்ற பாடல்களில் அகத்துறை சார்பாகவே இம்மலர் இடம்பெறுகிறது. தலைவன் தலைவியின் நலம் பாராட்டும் போது அவை சிறப்பிக்கப்படுகின்றன .தலைவன் அனிச்ச

மலரை நோக்கி வருகின்றான் .நீ மென்மைத் தன்மை உடைய ஆனால் எம்மால் விரும்பப்பட்டவை நின்னினும் மென்மையானவள் என்று அனைத்திலும் மெல்லிய தலைவியின் மென்மையை பெருமிதத்துடன் கூறுகிறான் தலைவன்.

"நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள் " (4)

என்பது தலைவனின் பெருமித கூற்று.

இன்னொரு தலைவி அனிச்சம் பூவின் காம்பினை நீக்காது தலையில் சூடினாள் இதை கண்ட தலைவன்.

"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை" (5)

என்று கூறினான் தலைவி அனைத்தின் கால் கலையாமல் கூடியதால் பாரம் பொறுக்காத எடை முடியும் இதை முடிந்ததால் தலைவிக்கு இழப்பு நேரம் அதனால் அதற்கு உரிய நீதி வழங்கப்படும் என்று தலைவன் தலைவியின் நுண்ணிடை மென்மையை நயம்பட புறப்படுகிறான்.

தலைவி தலைவனுடன் செல்ல விரும்புவதை தோழி தலைவனுக்கு உணர்த்துகிறாள் தலைவன் தலைவியின் மென்மைத்தன்மை கூறி மறுக்கிறான்.

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்" (6)

என்று உலகத்தாரால் மென்மைக்கு எடுத்துக்காட்டாக கூறப்படும் அனிச்சமும் அன்னத்தின் உள் இறகுமே தலைவியின் மென்மையான அடிகளுக்கு நெருஞ்சிமுள் ஆக உறுத்தும் அவ்வாறாக அவள் எவ்வாறு கற்கள் நிரம்பிய கானகத்தில் நடக்க இயலும் என்று வினவும் வினாவில் உடன் போக்கை மறுக்கிறான் தலைவன். இவ்வாறு அனிச்சமலர் மென்மையான தாய் மகளிடம் சூட்டிக்கொள்ளும் சிறப்புடையது வள்ளுவரால் காட்டப்படுகிறது

வள்ளுவர் மலரை பற்றி பொதுவாகவும் விளக்குகிறார் பூவின் நான்கு வகைகளில் தீர்ப்பு வினையும் கோட்டுப்பூ இணையம் குறிக்கிறார் அவர் உள்ளம் கவர்ந்த அனிச்சை மலரையே தலைவியின் மென்மைக்கு விருந்தினரின் மென்மைக்கும் ஊமையாக்கி கிழார் இதுவும் வள்ளுவர் செய்த பல புதுமைகள் ஒன்றாகும்

**துணைநூற்பட்டியல்:**

1. திருக்குறள் ஆராய்ச்சி உரை கி.வ. ஜெகந்நாதன் கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா மின்பதிப்பகம்.
2. திருக்குறள் ஆராய்ச்சி உரை கி.வ. ஜெகந்நாதன் கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா மின்பதிப்பகம்.
3. வள்ளுவர் வழிச் சிந்தனைகள், முனைவர் சரளா ராஜகோபாலன் ,அன்பு பதிப்பகம்,சென்னை.
4.வள்ளுவர் வழிச் சிந்தனைகள் ,முனைவர் சரளா ராஜகோபாலன், அன்பு பதிப்பகம்,சென்னை.
5. வள்ளுவம் பன்நோக்குப் பார்வை ப.முருகன் ,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை.
6. வள்ளுவர் வழிச் சிந்தனைகள், முனைவர் சரளா ராஜகோபாலன் ,அன்பு பதிப்பகம்,சென்னை.